கிருபையுள்ள வார்த்தை ®
KIRUBAIYULLA VAARTHAI
லூக்கா (LUKE) 4:22

Vol - 23
ஆண்டு சந்தா ரூ. 100/-
டிசம்பர் DECEMBER
தனிப் பிரதி ரூ. 10/-
2022

# தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

II கொரிந்தியர் 9:15




## 14th GRADUATION CEREMONY, THARANGAMBADI

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE
ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3
பெண்கள் பகுதி 7
வாலிபர் பகுதி 9
வரலாற்றில்.. 10
சிறுவர் பகுதி 11



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
**R. ஆண்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**
**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**
**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்
போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**
**Every Sundays 2pm**
**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**





**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**


**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**
421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்


**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை நன்றி மனப்பான்மை உள்ளவர்களாக உருவாக்கும் உன்னதமானவரின் வார்த்தை


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# நன்றி மனப்பான்மை
## ATTITUDE OF GRATITUDE

ஆசிரியர் உரை
Dr. P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், எண்ணில்லா நன்மைகள் செய்திடும் எல்லாம் வல்ல பிதாவின் பெயராலும், தமது இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்ட நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலும், கர்த்தருடைய வார்த்தையினாலே நமக்குள்ளே வாசம்செய்து, நம்மை வழிநடத்துகின்ற பரிசுத்த ஆவியானவரின் பெயராலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் வருகின்ற புதிய ஆண்டிலும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உண்டாவதாக என்று கூறி, எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த மாதம் நாம், நன்றிமனப்பான்மையைக் குறித்து, அதாவது கர்த்தருக்கு நன்றியுள்ள மனப்பான்மையுடன் நடந்துக்கொள்வதனைக் குறித்து வேதாகமத்தின் துணைகொண்டு ஆராய்ந்து அறிந்துகொள்வோம்.

நன்றியுள்ள மனதுடன் நடந்தவர்களைக் குறித்து அறிவதினாலே, நன்றிமனப்பான்மையுடன் வாழ்வதனை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

### 1. கர்த்தருக்கு நன்றி கூறினர்

**ஆதியாகமம் 24:26,27** "அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம் பண்ணி வருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டு வந்தார் என்றான்."

கர்த்தரிடத்தில் தங்கள் நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்திட, அவர்கள் அவருக்கு நன்றி கூறினார்கள். அவருக்கு நன்றி சொல்வதன் மூலம் தங்கள் நன்றியுணர்வினை வெளிப்படுத்தினர்.

நாம் ஒரு காரியத்திற்காக அநேக முறை ஜெபிக்கின்ற பழக்கமுடையவர்களாக இருக்கின்றோம். மிகவும் கண்ணீரோடே, பாரத்தோடே ஜெபிப்போம். அந்த காரியம் வாய்த்த பின்பு எத்தனை முறை அதற்காக கர்த்தரிடத்தில் நன்றி சொல்லி ஜெபித்தோம்? ஒன்று தேவை என்றால் அதற்காக அதிகாலை, நண்பகல், மாலை, இரவு என இடைவிடாமல் ஜெபித்துக் கொண்டே இருக்கின்றோம். அவைகளை கர்த்தர் கொடுத்துவிட்டபின்பு இடைவிடாமல் நன்றி கூறுகின்றோமா?

10 தொழுநோயாளிகள் வந்து குணமாக்கும்படி வேண்டினர்; 10 பேருமே செல்லும் வழியில் குணமாகினர். ஆயினும் ஒருவன் மாத்திரம் தான் மறுபடியும் வந்து நன்றி சொன்னான்; அவனையே ஆண்டவர் இயேசு பாராட்டினார் **(லூக்கா 17:11–19).** நாம் நம்முடைய தேவைக்காக பரலோக பிதாவை நோக்கி வேண்டிக் கொள்வதுபோலவே, அவைகளுக்காக அவருக்கு நன்றி சொல்லுகின்றவர்களாக இருக்கின்றோமா? அவ்வாறு செய்கின்றவர்களாக இருந்தால், தொடர்வோம், இல்லாவிட்டால் இன்றிலிருந்து துவக்குவோம். இந்த ஆண்டில் இதுவரை கர்த்தர் நமக்கு செய்தவைகளை நினைத்து, இந்த மாதம் முழுவதும் இடைவிடாது நன்றி சொல்லுவோம். நமது நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்துவோம்.

### 2. கர்த்தரை புகழ்ந்து துதித்தனர்

**யாத்திராகமம் 15:1–3** "அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு; கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்; கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்."

கர்த்தரிடத்தில் தங்கள் நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்திட, அவர்கள் துதித்தனர். அவரை புகழ்ந்து பாடுவதன் மூலம் தங்கள் நன்றியுணர்வினை வெளிப்படுத்தினர்.

பைபிளில் நிறைய இடங்களில், நிறைய நபர்கள் இவ்வாறு செய்தார்கள் எனநாம் வாசிக்க முடியும். பைபிளில் மிக நீண்ட புத்தகமான சங்கீதம், கர்த்தரை

புகழ்ந்து அவர்கள் பாடிய பாடல்களே அதிகம் நிறைந்துள்ளதாக இருக்கின்றது. அதிலும் சங்கீதக்காரன் தாவீது, எல்லா சூழலும் அவரை புகழ்ந்து பாடுகின்றவராக இருந்தார். **சங்கீதம் 34:1,3** "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக."

நாம் கர்த்தரைப் புகழ்ந்து அவருக்கு புகழ்மாலை சூட்டுகின்றவர்களாக இருக்கின்றோமா? பாடல்களை மனப்பாடமாக பாடுகின்றோமா? மனதிலிருந்து பாடுகின்றோமா? கர்த்தரை வாயினால் தான் துதிக்க வேண்டும் **(ரோமர் 15:5).** ஆனால் வெறும் வாய் மட்டுமே துதிப்பதாக இருந்தால் அந்த துதி கர்த்தருக்கு உகந்ததாக இருக்குமா? இராது என்பது நாம் அறிந்ததே **மத்தேயு 15:8** "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது."

ஆகையால் கர்த்தரை துதிக்கின்ற காரியத்தில் நமது இருதயமும் உதடும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு, அவரை மகிமைப்படுத்திடச் செய்து, நமது நன்றி மனப்பான்மையை வெளிப்படுத்துவோம்.

### 3. கர்த்தருக்கு பொருத்தனைகளை நிறைவேற்றினர்

**1 சாமுவேல் 1:11,20,24,27,28** "சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள். சிலநாள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். அவள் அவனைப் பால் மறக்கப்பண்ணின பின்பு, மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு, அவனையும் கூட்டிக்கொண்டு, சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனாள்; பிள்ளை இன்னும் குழந்தையாயிருந்தது. இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம்பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்; அவன் அங்கே கர்த்தரைப் பணிந்துகொண்டான்."

கர்த்தரிடத்தின் வேண்டிக்கொண்டதை நிறைவேற்றி தங்கள் நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்தினர். அன்னாள் பிள்ளைக்காக வேண்டி பொருத்தனை செய்தாள், அந்தப் பிள்ளை கிடைத்தவுடனே, தான் நேர்ந்துக்கொண்டதன்படி (பொருத்தனையின்படி) அந்தப் பிள்ளையை கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்க ஒப்புக்கொடுத்து தனது நன்றி மனப்பான்மையை செயல்படுத்தி காண்பித்தாள்.

**சங்கீதம் 22:25** "மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்; அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்."

இது யூதர்களின் பழக்கமாகும். நம் அனைவருக்கும் கூட இப்பழக்கம் இருக்கின்றது. நாம் கர்த்தரிடத்தில் செய்துகொண்ட பொருத்தனைகளில் எப்படிப் பட்டவர்களாக இருக்கின்றோம்? ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும், பிறந்த நாள் மற்றும் திருமண நாள்களின் போதும் மற்ற அநேக காரியங்களை குறித்து நாம் கர்த்தரிடத்தில் செய்த பொருத்தனைகளை நிறைவேற்றினோமா? அல்லது பாதியில் விட்டுவிட்டோமா? இந்த உலகத்தின் அழுத்தத்தில் அதனை மறந்துவிட்டோமா?

அப்பா பிதாவே ! இந்த நாள் முதல் இவைகளையெல்லாம் செய்வேன், உதாரணமாக தினமும் பைபிள் படிப்பேன், தியானிப்பேன், ஊழியம் செய்வேன் என்றும் நாம் செய்த பொருத்தனைகளில் நாம் எவ்வாறு இருக்கின்றோம்? மற்றும் அப்பா பிதாவே! என்னை மன்னியும், இனி இந்த பாவத்தினை செய்யவே மாட்டேன் என செய்த பொருத்தனைகளில் நமது நிலைதான் என்ன?

அவைகளை நிறுத்திவிட்டோமா? அல்லது அந்த பாவங்கள் தன்வசமாக நம்மை நிறுத்தி உள்ளதா? இவ்வளவு நாள் தவறவிட்டிருந்தால், தவறியிருந்தால், இன்றிலிருந்து சரிசெய்துகொள்வோமாக.

**உபாகமம் 23:23** "உன் வாயினால் சொன்னதை நிறைவேற்றவேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணிச் சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக."

## 4. மனந்திரும்புதலின் கனி தந்தனர்

**லூக்கா 19:5–8** "இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு; சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். அதைக்கண்ட யாவரும்; இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி; ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.

மனந்திரும்பிய வாழ்வின் மூலம் தங்கள் நன்றி மனப்பான்மையை வெளிப்படுத்தினர். அதாவது மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிதந்தனர். சகேயு ஆண்டவர் இயேசுவை தன் வீட்டில் ஏற்றுக்கொண்ட உடனே, தன் வாழ்வை மாற்றிக்கொண்டான். தனது மாறுதலான திருந்திய வாழ்வின் மூலம் தனது நன்றி மனப்பான்மையை செயல்படுத்தி காண்பித்தான்.

**1 ராஜாக்கள் 15:5** "தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்கு செம்மையானதைச் செய்துவந்தான்." தாவீது பாவம் செய்தான், அந்த பாவத்திற்கு மன்னிப்புக் கோரினான். கர்த்தரும் மன்னித்தார். அந்த மன்னிப்பை பெற்றவன் மறுபடியும் அந்த பாவத்தினை செய்யவில்லை. அதே பாவ வாழ்வை தொடரவில்லை.

**ரோமர் 8:30** "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." பரிசுத்த பிதாவினால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, ஆண்டவர் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப் பட்டவர்களான நாம் எவ்வாறு இருக்கின்றோம்? மாறின வாழ்வு தொடர்கின்றதா? மறுபடியும் பழைய வாழ்வினை தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோமா? நம்மை நாமே சீர்தூக்கிப்பார்ப்போம்.

**மத்தேயு 3:7,8** "பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு; விரியன் பாம்புக் குட்டிகளே ! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்." பிதாவின் கிருபையினாலே மன்னிப்பையும், இரட்சிப்பையும் பெற்றவர்களாகிய நாம் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனியை தந்து நமது நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்துவோம். அதனை இன்றிலிருந்தே தொடங்குவோம். விழுந்ததினை நினைத்து வருந்த வேண்டாம். நாம் போக வேண்டிய தூரம் இன்னும் இருக்கின்றது. ஆகையால் விழிப்புடனே, விசுவாசத்துடனே எழுந்து ஓடுவோம்.

## 5. கர்த்தருக்காக, கர்த்தருடன் கடைசிவரை நின்றனர்

**எபிரேயர் 11:33–38** "விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான

உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்திக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்."

கர்த்தருக்காக, கர்த்தருடன் கடைசிவரை நிலைநின்று தங்கள் நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்தினர். எவ்வளவு பெரிய புயல் வீசி அவர்களது வாழ்வை சின்னாபின்னமாக்கினாலும், அத்தனை துன்பங்களையும் மகிழ்வுடன் வரவேற்றனர். நிந்தனைகள் (அவமானங்கள்) அனைத்தையும் தங்கள் சிந்தனையில்கூட சுமக்கவில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தில் ஏதோ ஒரு மூலையில் கர்த்தருக்கு இடமளிக்காமல், தங்கள் இருதயம் முழுவதையும் அவரையே ஆக்கிரமித்து வைத்திருந்தனர். அதனால் எக்காரணத்தினையும் கொண்டு பின்னிட்டு பார்க்கவில்லை.

உலகத்தின் கவலை அவர்களை அழுத்தவுமில்லை, ஐசுவரியத்தின் மயக்கமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. காரணம் அவைகளுக்கு அவர்கள் வாய்ப்புத்தரவில்லை. இந்த உலகத்தின் பின்னே ஓடாமல், இயேசுவின் பின்னே ஓடினர். இன்றைய நாட்களிலும் அநேகர் இவ்வாறு ஓடிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

ஆயினும் நாம் அவ்வாறு ஓடுகின்ற கூட்டத்தில் இருக்கின்றோமா? இல்லை சற்றே ஒதுங்கி நிற்கின்றோமா? எனக்கு மரியாதை தரவில்லை, என்னை வரவேற்கவில்லை, நான் சொல்வதை கேட்கவில்லை என நம்மையே மையமாக வைத்து வாழ்கின்றோமா? நாம் எதற்காக இயேசுவின் பின்னே போகத்துணிந்தோம் அதனை மறந்துவிட்டோமா? அன்று இயேசுவின் பின்னே வர பாவமன்னிப்பும், பரிசுத்தமும், பரலோகமும், தேவ அன்பும், கிறிஸ்துவின் இரத்தமும் காரணமாக இருந்ததல்லவா? இன்று விலகி நிற்க என்ன காரணம் என சிந்திப்போம். ஆவிக்குரியவர்களாகிய நாம் ஆவிக்குரியவைகளுக்காக ஆண்டவரை பின்பற்றினோமே? இன்று சரீரத்திற்குரியவைகளுக்கும், இவ்வுலகத்திற்குரியவைகளுக்கும் நம்மை இழுத்துவிட்டதா? சத்தியத்திற்காக வாழ்கின்றோமா? அல்லது சவுகரியங்களை நோக்கி பயணிக்கின்றோமா? இந்த ஆண்டின் இறுதி நாட்களில் இருக்கின்றோம்.

**வெளி 2:10** "நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." கர்த்தருக்கு மரணபரியந்தம் உண்மையாக இருந்தவர்களையும், தங்கள் மரணத்திலும் உண்மையாக இருந்த பரிசுத்தவான்களை பற்றி எபி 11ம் அதிகாரத்தில் படிக்கின்றோமல்லவா? அவர்களை போன்று நாமும் கடைசிவரை கர்த்தருக்காக வாழ்வோம். கர்த்தருடன் வாழ்வோம். நமது நன்றிமனப்பான்மையை செயல்படுத்துவோம்.

பிரியமானவர்களே, நாம் நம்மை படைத்த பரம பிதாவிற்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம். நமது நன்றிமனப்பான்மையை அவருக்கு நன்றி சொல்லுவதன் மூலமும், அவரைப் புகழ்ந்து துதிப்பதன் மூலமும், பொருத்தனைகளை நிறைவேற்றுவதன் மூலமும், மனந்திரும்புதலின் கனி தருவதன் மூலமும், அவருக்காக அவருடன் கடைசிவரை நிலை நிற்பதன் மூலமும் வெளிப்படுத்துவோம்.

அன்புடன்,
**–ஆசிரியர்**

# நமக்கு எப்படிப்பட்ட தேவன் இருக்கின்றார்



அன்புள்ளம் கொண்ட சகோதரிகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த வருஷம் மழுவதும் நம்மை காத்து வாழவைத்த தேவனுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியது மிக மிக அவசியமானது.

நாம் நம் தேவனுடைய மகத்துவத்தை ஆழமாக அறிந்துகொள்ளும்போது நாம் இன்னும் அதிகமாய் அவருக்கு நன்றியுடன் வாழ முடியும் நம்போல் மற்ற தேவ பிள்ளைகளையும் கர்த்தருக்கு நன்றியுடன் வாழ செய்ய நாம் ஒரு தூண்டுதலாக இருக்க முடியும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படிப்பட்ட வாழ்வை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் என்று வேதத்தின் வசனங்களை கொண்டு தெரிந்துகொள்ளலாம் (எபி. 10:19-27).

நம் ஒவ்வொருவருடைய வாழ்வு (ஜீவன்) தேவனுடைய பலவிதமான அனுகூலமான ஆசீர்வாதத்தினாலே நிறைந்துள்ளது நாம் வாக்குத்தத்தம் நிறைந்த வாழ்வை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

அவர் உண்மையுள்ளவராக இருப்பதனால் கிறிஸ்தவ வாழ்க்கையை தொடர்ந்து தைரியமாய், தளராமல் வாழ வேண்டும்.

## நமக்கு எப்படிப்பட்ட தேவன் இருக்கின்றார் வசனங்களின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| எபி. 10:23 | – உண்மையுள்ளவர் |
| ரோமர் 3:4 | – தேவன் சத்தியபரர் |
| தீத்து 1:3 | – பொய்யுரையாத தேவன் |
| I கொரி 1:9 | – உண்மையுள்ளவர் |
| I தெச 5:24 | – உண்மையுள்ளவர் |
| I யோ 1:9 | – உண்மையும், நீதியுள்ளவர் |
| சங். 146:6 | – என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர் |
| எபி 6:10 | – அநீதியுள்ளவர் அல்ல |
| II பேதுரு 1:3,4 | – 1. மகிமை நிறைந்தவர்<br>2. காருண்யம் உடையவர்<br>3. திவ்ய வல்லமை<br>4. மகாமேன்மை<br>5. அருமையானவர் |

## நமக்கு எப்படிப்பட்ட வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார்

| | |
|---|---|
| எபி. 13:5 | – நம்மைவிட்டு விலகமாட்டார் கைவிடமாட்டார். |
| ஏசாயா 46:3,4 | – நாம் உருவானதிலிருந்து நம்மை அறிந்து வைத்திருக்கிறார். சொன்னதைச் செய்யுமளவு கைவிடுவதில்லை. |
| I கொரி 10:13 | – மனுஷனுக்கு வருகிற சோதனை அல்லது வேறே சோதனை இல்லை. |
| பிலி. 4:11-13 | – நமக்கு பெலனாக கிறிஸ்து இருக்கின்றார். |
| யாக் 1:12 | – வாக்குத்தத்தம் பண்ணினவர் ஜீவகிரீடத்தை தருவார். |
| I யோ 2:25 | – நித்திய ஜீவனை கொடுப்பார். |

அவர் நம்முடனே இருப்பதனால், இந்த வாழ்வில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும் சோர்ந்து போகாமல் வாழ வேண்டும். அப்படி நாம் வசனத்தின் துணைக்கொண்டு சபைக்கு வாழ்ந்து ஜெயிக்கும் போது நமக்காக அவர் தருவேன் என்று சொன்னதைத் தருவார்.

இப்படிப்பட்ட உண்மையுள்ள தேவன், வாக்குத்தத்தம் அருளிய தேவன் நமக்கு சொன்னதை செய்யும் தேவன் நம்முடனே இருந்து நம்மை வாழ வைப்பதனாலே நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக வாழ வேண்டும்.

| | |
|---|---|
| I தெச 5:18 | சங் 9:1 |
| ரோ 8:28 | சங் 95:2 |
| ஆபகூ 3:17,18 | சங் 95:2 |
| I கொரி 4:15 | II கொரி 2:14 |
| கொலே 3:15 | சங் 107:1 |

பிலி 4:6 எபே 5:20

I நாளா 16:34 கொலே 4:2

I தீமோ 4:4

நம் தேவன் எப்படிப்பட்டவர் என்பதையும் அவர் நமக்குச் சொன்னதை (வாக்குத்தத்தத்தை) நிறைவேற்றுவார் என்பதையும் நமக்கு எத்தனை போராட்டங்கள் சோதனைகள் வந்தாலும் நாம் தொடர்ந்து அவருக்கென்று வாழ்ந்து முடிந்தால் முடிவிலே நித்திய ஜீவனை கொடுப்பார் என்பதையும் வசனங்களில் துணைக்கொண்டு நாம் இன்று தெரிந்துகொண்டோம் என்று நம்புகின்றேன்.

நீங்கள் தேவனுக்கு இந்த வருஷ கடைசியில் எதற்காக எல்லாம் நன்றி செலுத்த நினைக்கிறீர்களோ உடனே முழங்கால் படியிட்டு அதை செலுத்துங்கள் அவரை தொழுதுகொள்ள போகும் தருணத்திலே அதை செய்யுங்கள் உங்களுக்கு விருப்பம் இருந்தால் எங்களுக்கும் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கின்றேன் நன்றி.

தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு நன்றிகள் பல.

மீண்டும் சந்திப்போம்...

பி. பெவர்லி லிதியா கிங்ஸ்லி

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-

**No. 92 4421 4421**

**வங்கிக் கணக்கில் செலுத்த,**

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# அப்போஸ்தலர்களின் நன்றியுணர்வு

பிரியமான வாலிப தம்பி தங்கைளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டின் கடைசி மாதத்தில் நாம் வந்து நிற்கிறோம். இம்மட்டும் வழிநடத்தி வந்த கர்த்தருக்கு நன்றிகளை செலுத்துவோம். நன்றியுணர்வோடு நடந்துகொள்வோம். நம்முடைய வாழ்வில் நமக்கு சிறு நன்மைகளை செய்தவர்களுக்கு கூட வாழ்நாள் முழுவதும் நன்றியுள்ளவர்களாக இருக்க முயற்சி செய்வோம். அப்படியென்றால் நமக்கு எப்பொழுதும் நன்மை செய்கின்ற, ஆண்டவருக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆண்டவர் இயேசுவின் சீடர்களான 12 அப்போஸ்தலர்களை குறித்து வேதாகமத்தில் வாசிக்க முடிகின்றது. அவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, சுயநலம் பாராது ஆண்டவருடைய சுவிசேஷத்திற்காக அவர்கள் எடுத்த பிரயாசம் தங்களுடைய கைகளில் ஆண்டவர் ஒப்படைத்த உன்னதமான ஊழியத்திற்கு அப்போஸ்தலர்கள் தங்கள் உயிரையும் கொடுக்கும் அளவிற்கு நன்றியுள்ளவர்களாக இருந்தனர். ஆண்டவர் இயேசு ஜீவித்த நாட்களில் அவருடைய வார்த்தையின்படி கீழ்ப்படிந்து அவருக்கு பின்சென்ற சீடர்களின் நன்றியறிதலை வெளிப்படுத்தினர்.

ஆனால், ஆண்டவர் இயேசு மரித்து, உயிர்த்தெழுந்ததற்கு பிற்பாடு, அப்போஸ்தலர்கள் இன்னும் அதிக பக்தி வைராக்கியத்தோடு எருசலேம் தேசமெங்கும் சுற்றித்திரிந்து நற்செய்தியை பரப்ப செய்தனர். தாங்கள் பெற்ற ஆனந்த பாக்கியத்தை எவ்வளவேனும் களப்பில்லாமல் கருத்தாய் போதித்தனர். ஆண்டவர் அப்போஸ்தலர்கள் கடைசி மூச்சுள்ளவரை அவருக்கு நன்றியுள்ளவர்களாக இயல்பான மனிதர்களாயிருந்து அவர்களை இயேசு போர்வீரர்களாக மாற்றிய இயேசுவுக்கு நன்றி என்ற சொல்லை செயலில் காண்பித்து, எட்டுத்திக்கும் சுவிசேஷம் பரவ காரணமாயினர்.

ஆம், பிரியமானவர்களே ! இந்த ஆண்டின் இறுதியில் நாம் நிற்கிறோம். எத்தனை பெரிய நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். வெறுமனே சபைக் கூட்டங்களில் வந்து கலந்து கொள்வதை அடுத்து அனேகரை ஆண்டவரின் பக்கம் அழைத்து வரும் அப்போஸ்தலர்கள் காட்டிய நன்றியைப் போல செய்ய முயற்சிப்போம். இந்த ஆண்டிலே நம்முயை வாழ்விலே நன்மைகளை அதிகமாக அருளிய ஆண்டவருக்கு நாம் நன்றியாக செய்ததை நினைத்துப் பார்ப்போம். ஆண்டவரின் சுவிசேஷம் நம்முடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது. அதேபோல அநேகருடைய வாழ்விலே நன்மைகள் வந்து சேர சுவிசேஷமாகிய சத்தியத்தை நன்றியுணர்வோடு எடுத்துரைப்போம். தேவன் தாமே அந்த முயற்சிகளின் உடன் இருப்பாக.

– உங்கள் அண்ணன்

**JP**

## பொதுவான செய்திகள்

### இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள்

| நூல்கள் | நூலாசிரியர்கள் |
|---|---|
| 1. சிலப்பதிகாரம் | - இளங்கோ அடிகள் |
| 2. இராமாயணம் (மூலம்) | - வான்மீகி |
| 3. இராமாயணம் (தமிழில்) | - கம்பர் |
| 4. சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| 5. பெரிய புராணம் | - சேக்கிழார் |
| 6. மகாபாரதம் | - வியாசர் |
| 7. மகாபாரதம் (தமிழில்) | - வில்லிபுத்தூர் ஆழ்வார் |
| 8. திருவாசகம் | - மாணிக்கவாசகர் |
| 9. தேம்பாவணி, கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் | - வீரமாமுனிவர் |
| 10. மகாவம்சம் | - மகாநாம தேரர் |
| 11. பாஞ்சாலி சபதம் | - சுப்பிரமணிய பாரதியார் |
| 12. காஞ்சிப்புராணம் | - சிவஞான முனிவர் |
| 13. நற்சிந்தனை | - யோகர் சுவாமிகள் |
| 14. நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| 15. வெற்றிவேற்கை | - அதிவீரராம பாண்டியன் |
| 16. நல்வழி, வாக்குண்டாம் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் | - ஔவையார் |
| 17. கீதாஞ்சலி | - ரவீந்திரநாத் தாகூர் |

பாடம் - 4

## பதிவேட்டுச் சான்றுகள்

## Documentary Evidence

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களாலும், அவர்களுடைய உடன் ஊழியர்களாலும் தான் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களும், உண்மைக்கும் கட்டுக் கதைகளுக்கும் வித்தியாசங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று அறிக்கையிட்டவர்களுமான ஆசிரியர்களால் எழுதப்படவில்லை என்று நமக்கு எப்படித் தெரியும்?

இரண்டாவதாக, ஆரம்ப ஆசிரியர்களால் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் தான் இன்று நம்மிடத்தில் இருக்கிற புதிய ஏற்பாடு என்று நாம் எப்படி உறுதிப்படுத்த முடியும்? அதிலே எந்தவித கலப்படமும் நடைபெறாமலும், உண்மையைத் திரித்துக் கூறாமலும் நமக்குக் கொடுக்கப்பட்டதாக நாம் எப்படித் தெரிந்து கொள்வது? நூற்றாண்டுகளினூடே புதிய ஏற்பாட்டை மறுபடியும் நகல் எடுத்த வேதபாரகர்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை என்று எப்படி நாம் நிச்சயப்படுத்திக்கொள்வது? இந்தப் புத்தகங்களின் ஆரம்பக்கட்ட மூலப்பிரதிகளின் நகல்களைக் கொண்டிருந்த மக்கள் இரகசியமாக மோசமான உள்ளடி வேலைகளுக்கு துணை போகாமல் இருந்தார்கள் என்று நாம் எப்படி அறிவோம்?

இந்தப் பாடத்தில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேடுவோம்.

### "வாழ்க்கை வரலாற்றுப்" பரிசோதனை

அனைத்து புராதன வரலாற்றுப் பதிவேடுகளும் ''வாழ்க்கை வரலாற்றுப் பரிசோதனைக்குக்'' கட்டுப்பட்டது. நம்மிடத்தில் உள்ள நகல்கள் மூலப் பிரதிகளின் உண்மையான முகவர்கள்தானா, மாற்றங்களுக்குரியவைகளோ, தவறுகள் உள்ளவைகளா, அல்லது இரகசிய ஏமாற்று வேலைகளுக்கு உட்பட்டதா என்று எப்படித் தீர்மானிக்க வேண்டும்? இந்தப் பரிசோதனையில் கேட்கப்படும் கேள்விகள் வருமாறு :

1. "கேள்விகளின் அடிப்படையில் எத்தனை நகல்கள் இருக்கின்றன?'' எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான நகல் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவாய் சுலபமாக ஒன்றையொன்று ஒப்பிட்டு எந்த மாற்றங்கள் இருந்தாலும் கண்டுபிடிக்க முடியும்.
2. "இந்த நகல்களை எங்கே கண்டுபிடிக்கலாம்?" அவைகள் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், இரகசிய ஏமாற்று வேலைகளுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் அவைகள் வித்தியாசப்பட்ட, ஒன்றுக்கொன்று தொலைதூரத்தில் இருந்தால் (காலத்தாலும், இடங்களாலும் வேறுபட்ட இடங்களில் இருந்தால்) இரகசிய ஏமாற்று வேலைகள் (உள்ளபடி) நடந்திருக்க வாய்ப்பில்லை.
3. ''மூலப்பிரதிகளுக்கும் ஆரம்பகால நகல்களுக்கும் இடையே எவ்வளவு காலம் கடந்து போயிருக்கக் கூடும்?" மூலப்பிரதி எழுதப்பட்டு நூற்றாண்டுகள் கழித்து ஆரம்ப கால நகல்கள் எழுதப்பட்டிருந்தால், மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கக் கூடும். எந்த அளவு இடைவெளி காலம் குறைந்துள்ளதோ அந்த அளவுக்கு குறைந்த மாற்றங்களே செய்திருக்க முடியும். குறுகிய கால இடைவெளி பதிவு ஏடுகளின் நம்பகத் தன்மையைக் கூட்டும்.
4. ''நகல்களுக்கிடையில் காணப்படும் வித்தியாசங்கள் என்ன?" பதிவேட்டின் நகல்கள் எண்ணிறைந்த குறிப்பிடத்தக்க வித்தியாசங்களைக் கொண்டிருந்தால், ஆரம்ப ஆசிரியர் மூலப்பிரதியில் என்ன எழுதினார் என்று தீர்மானிப்பது சாத்தியமில்லை. வித்தியாசங்கள் குறைவாகவும் சிறியவைகளுமாயிருப்பின், மூலப்பிரதியின் உண்மை நகல்கள் எவையெனத் தீர்மானிப்பது சாத்தியம்.

### புதிய ஏற்பாட்டுக்கும் ''வரலாற்றுப் பரிசோதனையை" பயன்படுத்தல்

இப்பொழுது, நாம் "வரலாற்றுப் பரிசோதனையை" புதிய ஏற்பாட்டுக்கும் பயன்படுத்தி, எப்படிப்பட்ட பதில்களைப் பெறுகிறோம் என்று காண்போம்.

- அடுத்த இதழில் தொடரும்...

# நன்றியுள்ள லேகியோன்


கடவுளுக்கு பிரியமான செல்லங்களா, எப்படியிருக்கிறீர்கள்? நல்லா இருக்கிறீர்களா? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

பிள்ளைகளா ! 11 மாதம் கடவுள் நம்மை பாதுகாத்து, எல்லாவற்றிலேயும் கூட இருந்து நடத்தினதற்காக நன்றி சொல்வீர்களா?

பைபிளிலிருந்து ஒரு உண்மை சம்பவத்தினை பற்றி தெரிந்துகொள்ளலாமா? கதரேனருடைய நாட்டில், கடற்கரைக்கு அருகில் ஒரு ஊரில் ரொம்ப நாளாய் பிசாசு பிடித்த ஒரு மனிதன் இருந்தான். அவன் கல்லறைகளில் குடியிருந்தான். அவனை கட்டிப்போட ஒருத்தராலும் முடியவில்லை. அப்படி கட்டிப்போட்டாலும் அந்த சங்கிலிகளை முறித்து விடுகின்றவனாகவும், தன்னைத்தானே கல்லை வைத்து குத்தி காயப்பட்டுக்கொள்ளகூடியவனாக, உடை ஏதும் அணியாமல், மிகவும் அவலட்சணமாக இருந்தான். அவனைப் பார்த்த அந்த ஊர் மக்கள் எல்லாரும் பயந்தார்கள்.

ஒரு நாள் ஆண்டவர் இயேசு அந்த ஊர் வழியாக ஊழியத்திற்கு சென்றார். அவன் அவருக்கு எதிராக வந்து நின்றான். ஆண்டவர் இயேசு உன் பேர் என்ன என அவனை கேட்டார். அவன் தனக்குள் அதிக பிசாசுக்கள் இருந்ததால், தன் பெயரை லேகியோன் என்று சொன்னான்.

மேலும், அவன் இயேசுவை பார்த்து என்ன சொன்னான் தெரியுமா? என்னை வேதனைப்படுத்தாதபடி உம்மை வேண்டிக் கொள்கிறேன் என்றான். ஆண்டவர் இயேசு அவனுக்குள் இருந்த அசுத்த ஆவிகளை எல்லாம் துரத்தி, அவனை குணமாக்கினார். உடனே அவன் வஸ்திரம் தரித்து அவர் செய்த நன்மையை நினைத்து அவர் பாதத்தில் அமர்ந்து அவர்கூடவே இருக்க ஆசைப்பட்டான். ஆனால், இயேசு என்ன சொன்னார் தெரியுமா? நீ உன் வீட்டுக்குப்போ, நான் உனக்குச் செய்தவைகளை எல்லாருக்கும் அறிவி என்றார். அவர் சொன்னபடி அநேகருக்கு இயேசுவை பற்றி அறிவித்தான். அவருக்கு கீழ்ப்படிந்து நன்றியை வெளிப்படுத்தினான்.



கடவுளுக்கு பிரியமானவர்களே ! நீங்களும், கர்த்தர் உங்களுக்கு செய்த நன்மையை நினைத்து, நன்றி சொல்வீர்களா? உணவு கொடுத்திருக்காரு, உடை கொடுத்திருக்காரு, இருக்க இடம் கொடுத்திருக்காரு, அம்மா அப்பா கொடுத்திருக்காரு, இப்படி ஒவ்வொன்றாய் நினைத்து அவருக்கு நன்றி சொல்லுங்க. மற்றும் இந்த பிசாசு நீங்கின அண்ணனை போல், இயேசுவை பற்றி எல்லாருக்கும் சொல்லுங்க. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : சங். 103:2** "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே".

**– அன்பு ஏசுதாஸ்**

## சிறுவர்க்கான கேள்விகள்

1. லேகியோன் எப்படி ஆண்டவருக்கு நன்றி சொன்னான்?
2. 10 குஷ்டரோகிகளும் இயேசுவைக் கேட்டது என்ன?
3. நாகமானுக்கு இருந்த வியாதி என்ன?
4. எத்தனை முறை நாகமான் நதியில் முழுகி எழ வேண்டும்?

# நன்றியுள்ளவர்களாயிருப்போம் !





ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

இயேசு ஆண்டவர் இந்த உலகத்தில் மனிதனாக வாழ்ந்த போது பல இடங்களுக்கு சென்று தேவனுடைய வார்த்தையை உபதேசித்தும் அநேக வியாதிகாரர்களையும் சுகமாக்கியும், அநேக அற்புதங்களையும் செய்து கொண்டு வந்தார். அப்படி அவர் ஒரு முறை எருசலேம் நாட்டை நோக்கி பிரயாணமாக போகையில் ஒரு கிராமத்திற்குள் நுழைந்தார். அவர் வருவதை கண்ட குஷ்டரோகமுள்ள பத்துபேர் அவரை நோக்கி வந்து நின்று; இயேசுவே! எங்களுக்கு இரக்கஞ் செய்யுங்கள் என்று சத்தமிட்டார்கள். அதற்கு இயேசு; நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களை காட்டுங்கள் என்றார். அவர் சொன்னதை கேட்டு அவர்கள் போகிற வழியிலே சுத்தமானார்கள். அதாவது குஷ்டரோகத்திலிருந்து சுகம் பெற்றார்கள். அப்போது தான் சுகமானதை கண்ட 10 பேரில் ஒருவன் இயேசுவினிடத்தில் திரும்பி ஓடிவந்து தேவனை மகிமைப்படுத்தி அவர் பாதத்திலே விழுந்து அவருக்கு தன் நன்றியை தெரிவித்தான். அவன் செய்கையை கண்ட இயேசு ஆண்டவர்; சுத்தமானவர்கள் 10 பேர் அல்லவா மற்ற ஒன்பது பேர் எங்கே என்றார். திரும்பி வந்து நன்றி சொன்ன மனிதனைப் பார்த்து ஆண்டவர் சந்தோஷப்பட்டார்.

குட்டீஸ் ! நாமும் தேவன் நமக்கு இந்த வருடம் முழுவதும் செய்தவைகள் மற்றும் கொடுத்தவைகளுக்காக நன்றி சொல்லி அவரை மகிமைப்படுத்துவோம்.

**மனப்பாட வசனம் : 2 கொரிந்தியர் 9:15** "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்."

**– குயினி பிரதீப்**

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.** சங்கீதம் 103:1

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.** சங்கீதம் 103:2

## வாசகர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# நன்றியுள்ள நாகமான்

அன்பான மழலைச் செல்லங்களுக்கு, நீங்கள் அனைவரும் அரையாண்டு தேர்வினை (Half Yearly Examinations) நன்றாக எழுத ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தர் கூடவே இருப்பார், நன்றாக படித்து, தைரியமாக எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

இந்த மாதம் ஏறக்குறைய 2700 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு உண்மை சம்பவத்தினை பற்றி பைபிளிலிருந்து கற்றுக்கொள்வோம்.

இஸ்ரவேல் நாட்டை யோராம் ராஜா ஆண்டுக்கொண்டிருந்தார். அந்நாட்களில் எலிசா தீர்க்கத்தரிசியாக இருந்தார். சிரியா நாட்டின் படைத்தலைவனாக நாகமான் என்பவர் இருந்தார். இவர் மிகவும் திறமைசாலி, மற்றும் பலசாலி, தனது நாட்டின் அரசனுக்கு நிறைய வெற்றிகளை பெற்றுத்தந்தவர். அதனால் அரசன் இவர்மேல் மிகவும் பிரியமாக இருந்தார். அப்படிப்பட்ட நாகமானுக்கு தொழுநோய் (குஷ்டரோகம்) வந்துவிட்டது. அந்த காலத்தில் அது மிகவும் கொடிதான தொற்றுநோய். குணப்படுத்த மருந்துகளும் இல்லை என்பதனால், அந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களை ஊருக்கு புறம்பே தள்ளிவைக்கும் பழக்கமெல்லாம் இருந்தது.


நாகமான் தன் வீட்டிலே அடிமையாக இருந்த இஸ்ரவேல் நாட்டின் சிறுபெண்ணின் மூலம் எலிசாவையும் கர்த்தரையும் பற்றி அறிந்து, தனது அரசனிடம் அனுமதிபெற்று, இஸ்ரவேல் நாட்டிற்கு வந்து, எலிசாவை சந்தித்தான். எலிசா நாகமானை யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கி எழுந்திரி உன் நோய் சரியாகிவிடும் என்றார். இதை கேட்ட நாகமான் கோபமடைந்தான். ஆயினும் எலிசா சொன்ன கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான். என்ன ஆச்சரியம் உடனே அவனது நோய் குணமாகி, அவனது தோல் குழந்தையின் தோலை மென்மையாகவும் அழகாகவும் மாற்றிற்று.

கர்த்தர் தன்னை அற்புதமாக குணமாக்கினதை உணர்ந்த நாகமான், எலிசாவிடம் வந்து, இனி நான் கர்த்தரை தவிர எந்த ஒரு விக்கிரத்தினையும் வழிபடமாட்டேன் என விசுவாசத்துடன் அறிக்கையிட்டார் மற்றும் செய்தும் காண்பித்தார்.

செல்லங்களே ! நாமும் கர்த்தர் நமக்கு செய்த நன்மைக்கு, நமது நன்றி உணர்வினை அவரிடத்தில் விசுவாசத்துடன் மற்றும் உண்மையாக இருந்து நமது நன்றிமனப்பான்மையை வெளிப்படுத்துவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக.

**மனப்பாட வசனம் : சங் 116:12,13** "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்."

**– பிரியா ஆண்டனி**





# யோபுவின் நன்றியறிதல்




ஹாய் குட்டீஸ் ! எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா? உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கின்றோம். இந்த மாதம் யோபுவிடம் ஒரு நல்ல குணத்தினை கற்றுக்கொள்வோம்.

ஊத்ஸ் என்ற நாட்டிலே யோபு என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அந்த நாட்டில் இருந்தவரக்ளுக்குள்ளே கர்த்தருக்கு பயந்து, ஒழுக்கமான நேர்மையான நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார். கர்த்தர் அவரை ஆசீர்வதித்து, பாதுகாத்ததினாலே அந்த நாட்டிலேயே அவர்தான் மிகப்பெரிய பணக்காரராக இருந்தார். கர்த்தர் அவருக்கு அன்பான மனைவி, ஏழு ஆண் பிள்ளைகள் மற்றும் 3 பெண் பிள்ளைகளை கொடுத்தும் ஆசீர்வதித்திருந்தார்.

ஒரு நாள் தேவதூதர்கள் அனைவரும், கர்த்தருடைய சமூகத்தில் வந்து நிற்கும்போது, அவர்களுடன் சாத்தானும் வந்து நின்றான். கர்த்தர் யோபுவினை பற்றி பெருமையாக பேசும்போது, சாத்தான், யோபு ஒன்றும் நீதிமானில்லை, நீங்கள் அவனை வேலியடைத்து பாதுகாக்கிறீங்க, அதனாலதான் நல்லவனாக இருக்கின்றார். நீங்கள் அவருக்கு கஷ்டம் கொடுத்தால், அவன் கெட்டவனாக தான் இருப்பான் என மட்டமாக பேசினான்.

கர்த்தர், யோபு உண்மையிலே நீதிமான் தான் என்பதனை சாத்தானிற்கு புரிய வைக்க, யோபுவை கஷ்டப்படுத்த சாத்தானிற்கு அனுமதிகொடுத்தார். சாத்தான் யோபுவிற்கு பல துன்பங்கள் கொடுத்துப்பார்த்தான். யோபுவின் சொத்துக்களையெல்லாம் அழித்தான். பிள்ளைகளையெல்லாம் கொன்றான், அன்பான மனைவியை எதிரியாக மாற்றினான். உடம்பெல்லாம் கொப்புளங்கள் வரச்செய்தான். ஆயினும் யோபு, கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் அவருக்கு நன்றி என சொன்னார்.

குட்டீஸ், யோபு, கர்த்தரை பற்றி ஒரு குறையும் சொல்லாமல், கடைசிவரை உண்மையுள்ளவராக, நன்றியுள்ளவராகவே இருந்தார். கர்த்தர் யோபின் மேல் வைத்த நம்பிக்கை தான் வெற்றிபெற்றது. சாத்தானும் அவனது தந்திரமும் தோற்றுப்போயின. யோபு கர்த்தர் கொடுத்த போதும் நன்றி சொன்னார்.



எல்லாம் இழந்த போதும் கர்த்தருக்கு நன்றி சொன்னார். நாமும் அவரைப் போலவே நன்றியுள்ளவர்களாக இருப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

**மனப்பாட வசனம் : யோபு 1:21,22** "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை.

**– ரா. ஏஞ்சலின் கமலம்**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. பிரசன்னா – சித்தோடு
2. M. ஜோனா – கரூர்
3. M. ராஜா – கரூர்
4. A. ஹானாஜோதி – மதுரை
5. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை

## சென்ற மாத விடுபட்டவர்கள்

1. ஷீலா தேவி – மூலனூர்
2. S. மரியாள் செல்வராஜ் – மூலனூர்
3. T. சித்ரா – மூலனூர்
4. லட்சுமி – கரையூர்
5. குப்பாத்தம்மா – மூலனூர்

## டிசம்பர் மாத கேள்விகள்

1. ஆபிரகாமின் வேலையாள் எவ்வாறு நன்றி செலுத்தினார்?
2. 10 தொழுநோயாளிகள் செய்தது என்ன?
3. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை எவ்வாறு புகழ்ந்து நன்றி செலுத்தினர்?
4. அன்னாள் எவ்வாறு தான் செய்த பொருத்தனையை நிறைவேற்றி நன்றி செலுத்தினாள்?
5. சகேயு எவ்வாறு தன் நன்றியை வெளிப்படுத்தினார்?
6. விசுவாச வீரர்கள் தங்களை நன்றியை வெளிப்படுத்தியது எப்படி?
7. தாவீது எவ்வாறு நன்றியை வெளிப்படுத்தினார்?
8. தேவன் எப்படிப்பட்டவராயிருக்கின்றார்?
9. அப்போஸ்தலர்களிடமிருந்த நன்றியுணர்வு எப்படிப்பட்டது?
10. வெளி 2:10-ன்படி நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-01-2023**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. மத்தேயு 5:28 | 6. சங் 115:17 |
| 2. தானி 12:2 | 7. யாக் 4:14 |
| 3. வெளி 20:14 | 8. பிர 9:10 |
| 4. வெளி 20:12 | 9. 1 கொரி 15:42 |
| 5. 1 தீமோ 4:12 | 10. மாற் 16:9 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
2. Mrs. ஆனி விக்டோரியா – சென்னை
3. K. ராஜா – அந்தியூர்
4. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
5. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
6. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
7. R. சரோஜா – தென்கலம்
8. Mrs. ஹெலன் திலக் – புதுக்கோட்டை
9. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
10. Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் – நெல்லை
11. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
12. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
13. Mrs. மேரி ராஜ் – மதுரை
14. Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
15. P. ஷைனி – காங்கேயம்
16. S. ஐசுவரியா – காங்கேயம்
17. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
18. A. லலிதா – புதுக்கோட்டை
19. Mr. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
20. Mrs. மீனாள் – மூலனூர்
21. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
22. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
23. A. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
24. S. பாக்கியராஜம் – மதுரை
25. Mrs. S. சூரியா சௌந்தர்பாண்டி – மதுரை
26. Mrs. M. ஈஸ்வரி முருகன் – கரூர்
27. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – மதுரை
28. Mrs. விமலா ஜெயராஜ் – சேலம்
29. Mrs. P. உமாராணி – சித்தோடு
30. N. ஜோசுவா ஜெயசீலன் – காங்கேயம்
31. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
32. Mrs. செல்வமணி ஜேம்ஸ் – சேலம்
33. Mrs. A. இமெல்டா சுந்தர்சிங் – ஈரோடு
34. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
35. J. விஜய் – மதுரை
36. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
37. Mrs. சாந்தி ஜோயல் – மூதிருச்சி
38. Mrs. J. ஜெயா ஜெபசெல்வம் – மதுரை
39. R. ஞானசிரோன்மணி – மதுரை
40. Mrs. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
41. S.G. சேகர் – இராணிபேட்டை
42. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
43. Mrs. R.P. டேவிட் – சேலம்
44. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
45. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி

Place of Publication : **Arasaradi, Madurai**
**Printed & Published by P.C. PHILEMON RAJAH**
**Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2021 - 2023**
**Date of Publication : 8th December 2022**
**Posted at Arasaradi HPO on 10th 11th December 2022**

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்









அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH











**AVAILABLE FOR SPECIAL PRICE!**

**If undelivered please return to :**

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

**To**